Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALPARAI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | STC 186/2020 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW5 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | வேலாயுதம் |
| Father's Name | -- | சண்முகம் |
| Village | -- | கெஜமுடி |
| Taluk | -- | வால்பாறை |
| Caste | -- | -- |
| Calling | -- | கூலி |
| Religion | -- | இந்து |
| Age | -- | 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 03rd February 2023.

**சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது**

**(எதிரி இன்று ஆஜரில்லை. எதிரியால் கு.வி.மு.ச. 317 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை :**

நான் கெஜமுடி எஸ்டேட்டில் வசித்து கறிக்கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 23.02.2020 அன்று காலை 06.30 மணிக்கு பக்கத்து கடைக்காரர் எங்களது முதலாளியான அ.சா.3 டம் தகராறு செய்தார்.

அப்போது எதிரி பிரபு அங்கு வந்தார். எதிரி பிரபு கத்தியை எடுத்து அ.சா.1 ஐ குத்த வந்தார். அருகில் இருந்த நாங்கள் விலக்கி விட்டோம். பிறகு அது பற்றி புகார் கொடுக்க அ.சா.3 வால்பாறை காவல்நிலையம் சென்றார். அதன் பிறகு காவல்நிலைய அதிகாரி 7 மணிக்கு விசாரித்துவட்டு தான் திரும்ப அழைக்கும்போது வரும்படி சொல்லிவிட்டார்.

பிறகு காலை 11.30 மணியளவில் காவல்நிலையத்திற்கு நானும், அ.சா.3 ம் சென்றோம். அப்போது அ.சா.1 எங்களை விசாரித்தார். எதிரி பிரபு, செந்தில்குமார் ஆகியோரை வெளியே செல்லுமாறு அ.சா.1 கூறினார்.

எதிரி பிரபு அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டி, வெளியே வா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். பிறகு எதிரி பிரபு அ.சா.1 ன் வலது தோளில் குத்தி கீழே தள்ளிவிட்டார். உடனே அங்கிருந்த போலிசார் கூடியதால், பிறகு எதிரி பிரபு ஓடிவிட்டார்.

**(எதிரியினை அடையாளம் காண்பிப்பதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

District Munsif cum Judicial Magistrate, Valparai

(ஒப்பம்)திரு.M.A.சுவேதாரண்யன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.